சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 25.05.2026**

**முன்னிலை**

## திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,
## மாநில தகவல் ஆணையர்

•••••

**வழக்கு எண். CP 307/E/2024**

திரு.R.மயில்சாமி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை
மாவட்டம் - 625 020.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.03.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.சாந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம் அவர்கள் இவ்வாணையத்தில் 15.05.2026-ல் நேரில் ஆஜராகி, முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர் அவர்களின் 14.05.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரரின் 20.09.2023 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்காத

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ம.புவனேஸ்வரி என்பவரின் 09.05.2026 தேதியிட்ட எழுத்து மூலமான விளக்க கடிதத்தில், இவ்வழக்கில் மனுதாரர் தகவல் வழங்கக் கோரி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மதுரை மேற்கு வட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளதாகவும், மேற்படி மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பரங்குன்றம் அவர்களுக்கு 20.09.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மாற்றப்பட்டதாகவும், மேற்படிமனு வரப்பெற்ற காலத்தில் மகளரிர் உரிமைத் தொகை திட்டம், 15.09.2023-ஆம் தேதியில் தொடங்குவதற்கான முன்னேற்பாடு பயனாளிகள் தேர்வு செய்யும் பணிகள் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டு இருந்ததாகவும், அதிக பணிச்சுமையின் காரணமாக மட்டுமே மேற்படி மனுவின் மீது உரிய கால வரையறைக்குள் மனுதாரருக்கு பதில் வழங்க இயலவில்லை எனவும், எந்த உள்நோக்கத்தினாலும் ஏற்பட்டதல்ல எனவும், எனவே தனது விளக்கத்தினை ஏற்று, மனுவினை முற்றாக்கம் செய்யுமாறும் கோரியுள்ளதாகவும், மேலும் எதிர்வரும் காலங்களில் காலதாமதம் நிகழாமல் தகவல் வழங்கப்படும் என்பதையும், தனியரின் விளக்கத்தினை ஏற்று ஆவண செய்யுமாறும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

3. மேற்படி அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தினை ஆணையம் ஏற்கிறது. மேலும், இனிவரும் காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்க தவறும் பட்சத்தில், தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர் மீது பொருந்தத் தக்க விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படும் என கடுமையாக எச்சரிக்கப்படுகிறது.

4. இருப்பினும், இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்காத வகைக்கு, மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள, காலவிரையம் மற்றும் மனவுளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு, **<u>தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(8)(b)-</u>**

**<u>ன்கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க</u>,** வட்டாட்சியர் அலுவலகம், திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம் என்ற பொது அதிகார அமைப்பிற்கு உத்தரவிடப்படுகிறது.

5. மேற்படி தொகையினை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான அறிக்கையின் நகலினை 15.06.2025-க்குள் இவ்வாணையத்திற்கு முகவரியிட பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கானது முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 307/E/2024</u>
<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம் - 625 020.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பரங்குன்றம் வட்டம், மதுரை மாவட்டம் - 625 020.

<u>மேல்முறையீட்டாளர்</u>
திரு.R.மயில்சாமி, த/பெ. இராமலிங்கம்,
பிளாட்-5 அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம் - 18.

Copy to: File MP/PA,